**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 476/2016</u>**

நாள் 10.01.2025

PW1 – சரஸ்வதி

க/பெ – லேட்.பழனிச்சாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of January 2025.)**

**<u>5,6,19 முதல் 23 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. தாவா சொத்துக்களுக்கு பட்டா எனது மாமியார் மயங்காத்தாள் பெயரில் உள்ளது. அவர் பெயருக்கு எந்த வருடத்தில் பட்டா ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது. மயங்காத்தாள் பெயரில் உள்ள பட்டாவை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். மயங்காத்தாள் கடந்த 2016–ம் ஆண்டில் இறந்து போய்விட்டார். எனது மாமியார் இறந்த பிறகு அவரது வாரிசுகள் சொத்திற்கு பட்டா கேட்டு விண்ணப்பித்தார்களா? என்றால் அது எனக்குத் தெரியாது. எனது மாமியார் பெயரில் ஏற்பட்டதாக சொல்லப்படும் கிரைய ஆவணம் சட்டப்படியான ஆவணம் கிடையாது என்றும், அந்த ஆவணம் நடைமுறைக்கே வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் எனது மாமியார் மயங்காத்தாள் மற்றும் மாமனார், எனது கணவர் ஆகியோர் பெயருக்கு பட்டாவே ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த நிலையில் நாங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் சட்டப்படியான ஆவணங்கள் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை 2012–ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். தாவா தபசில் சொத்து விபரத்தில் கண்ட சொத்துக்களுக்கு உட்பிரிவு எண் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சென்னிமலைக்கவுண்டரின் இறப்புச் சான்று, வாரிசுச்சான்று எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், அவருடைய வாரிசுகளுக்கு எதிராக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

2. இந்த வழக்கின் 3,4,5,6 பிரதிவாதிகள் பெரிய முருகப்ப கவுண்டரின் வாரிசுகள் என்றால் சரிதான். 30.05.1960–ம் தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் பொதுவில் தாவா சொத்துக்களில் ஒரு பகுதி சொத்தையும், மற்ற சொத்துக்களையும் நஞ்சப்ப கவுண்டர் மகன் கந்தசாமி கவுண்டர் வகையறாவிடம் இருந்து பெரிய முருகப்ப கவுண்டர் கிரையம் பெற்றார் என்றால் சரிதான், எனது மாமியார் நஞ்சக்குட்டி கவுண்டர் மகன் கந்தசாமி கவுண்டர் வகையறாவிடம் இருந்து கிரையம் பெற்றார். நஞ்சப்ப கவுண்டர் மகன் கந்தசாமி கவுண்டர் வகையறா அவர்களுக்கு கடந்த 30.05.1930–ம் தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களை தான் அவர்கள் பெரிய முருகப்ப கவுண்டருக்கு கிரையம் கொடுத்தார்கள் என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது. அதனால் பெரிய முருகப்ப கவுண்டர் பெயரில் ஏற்பட்டுள்ள 30.05.1960–ம் தேதியிட்ட பதிவு கிரைய பத்திரம் செல்லாது என்றும், அது எங்களை கட்டுப்படுத்தாது என்றும் எந்தவொரு பரிகாரம் இந்த வழக்கில் கோரவில்லை என்றால் சரியல்ல. பெரிய முருகப்ப கவுண்டர் அவர் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரத்தின் பேரில் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.264/1962 என்று தாக்கல் செய்து முடிவில் முதல்நிலை தீர்ப்பாணையும், இறுதிநிலை தீர்ப்பாணையும் ஏற்பட்டு அதன் பேரில் நிறைவேற்று மனு தாக்கல் செய்து அவரவர்களுக்கு பிரிக்கப்பட்ட சொத்தின் சுவாதீனமும் 1966–ம் ஆண்டு

வாக்கிலேயே எடுக்கப்பட்டு விட்டது என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது.

3. மேற்படி பெரிய முருகப்ப கவுண்டரின் வாரிசுகள் எங்களுக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அவிநாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.233/2012 என்ற வழக்கை தாக்கல் செய்து இரு தரப்பு விசாரணைக்குப் பிறகு அவர்களுக்கு ஆதரவாக தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது. மேற்படி வழக்கில் அ.வ.எண்.264/1962 என்ற வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை தாக்கல் செய்யப்பட்டு அதற்கு பின்னிட்டு தான் தீர்ப்பு ஏற்பட்டது என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது.

4. எனது மாமனார் குமாரசாமி கவுண்டர் மீது பெரிய முருகப்ப கவுண்டர் நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் கோரி திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.154/1978 என்ற வழக்கை தாக்கல் செய்து, அந்த வழக்கில் குமாரசாமி கவுண்டர் அந்த வழக்கில் கண்ட சொத்து சம்பந்தமாக பெரிய முருகப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் தான் என்றும், அதனால் தான் எந்தவொரு இடையூறும் செய்யமாட்டேன் என்று தெரிவித்து குறிப்பாணை தாக்கல் செய்ததின் பேரில் பெரிய முருகப்ப கவுண்டருக்கு ஆதரவாக தீர்ப்பு ஏற்பட்டது என்றால் அது எனக்குத் தெரியாது. மேற்படி வழக்கு பற்றிய விபரங்கள் அனைத்தும் எனது கணவருக்கும், எனது மச்சான்களுக்கும் நன்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல.

5. மேற்படி அ.வ.எண்.233/2012 என்ற வழக்கில் பிறந்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக எங்கள் தரப்பில் எந்தவொரு மேல்முறையீடும்

செய்யவில்லை என்றால் அது எனக்குத் தெரியாது. அதேபோல் அ.வ.எண்.264/1962 என்ற வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பாணைக்கு எதிராக எனது மாமியாரோ, அதனைத் தொடர்ந்து அவருடைய வாரிசுகளோ எந்தவொரு மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் அது எனக்குத் தெரியாது. அ.வ.எண்.264/1962 வழக்கில் பிறந்த இறுதிநிலை தீர்ப்பாணையின் பேரில் பெரிய முருகப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து உட்பிரிவுகள் ஏற்பட்டு அந்த சொத்துக்களுக்கு அவரது பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது. பெரிய முருகப்ப கவுண்டர் இறந்து போன பிறகு அவரது வாரிசுகளான பழனிச்சாமி கவுண்டர், சுப்பிரமணியம், வெங்கடாசல கவுண்டர், சரஸ்வதி ஆகியோர் பெயரில் கூட்டுப் பட்டா எண்.666 ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது. அதனால் தாவா சொத்துக்களை பொறுத்து உட்பிரிவு செய்து பெரிய முருகப்ப கவுண்டர் பெயரிலும், அவரைத் தொடர்ந்து அவருடைய வாரிசுகள் பெயரிலும் கொடுக்கப்பட்ட பட்டாவை ஆட்சேபித்து எங்கள் தரப்பில் இதுநாள் வரையில் ஆட்சேபணை மனுவை வட்டாச்சியரிடமும், வருவாய் கோட்டாச்சியரிடமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களைப் பொறுத்து மேற்படி வீதம் முன் வழக்குகளில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஏற்பட்டுள்ள விபரம் எங்களுக்கு நன்கு தெரிந்திருந்தும், தாவா சொத்துக்களில் எங்களுக்கு எந்தவொரு உரிமையும் இல்லாததால் தான் நாங்கள் யாதொரு ஆட்சேபணையும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

6. தாவா தபசில் சொத்தில் கண்ட சர்வே எண்.49 ஆனது பல உட்பிரிவுகள் ஏற்பட்டு அதில் புதிய உட்பிரிவு படி சர்வே எண். 49/3B1,

49/3A1 என்று பெரிய முருகப்ப கவுண்டர் வகையறாவிற்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் சர்வே எண்.56/2 ஆனது உட்பிரிவுகள் ஏற்பட்டு புதிய உட்பிரிவு படி சர்வே எண்.56/2A1 என்று பெரிய முருகப்ப கவுண்டர் வகையறாவிற்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் சர்வே எண்.54/2 ஆனது உட்பிரிவுகள் ஏற்பட்டு புதிய உட்பிரிவு படி சர்வே எண்.54/2A3 என்று பெரிய முருகப்ப கவுண்டர் வகையறாவிற்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் சர்வே எண்.55/2 ஆனது உட்பிரிவுகள் ஏற்பட்டு புதிய உட்பிரிவு படி சர்வே எண்.55/2A என்று பெரிய முருகப்ப கவுண்டர் வகையறாவிற்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதனால் மேற்படி வீதம் உட்பிரிவு செய்து பட்டா கொடுக்கப்பட்ட மேற்படி சொத்துக்களை பெரிய முருகப்ப கவுண்டரும், அவரைத் தொடர்ந்து அவருடைய வாரிசுகளும் கடந்த சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக தனித்த பாத்தியத்துடன் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

7. இந்த நிலையில், சட்டப்படி செல்லாத ஆவணத்தை கொண்டு சொத்துக்களில் உள்ள அன்றைய உட்பிரிவுகள் எதையும் குறிப்பிடாமல் சுமார் 50 ஆண்டுகள் கழித்து இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் பெரியமுருகப்ப கவுண்டருக்கும், அவருடைய வாரிசுகளுக்கும் பாத்தியப்பட்ட மேற்படி சொத்துக்கள் அவர்களின் தனித்த முழு சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், அதில் எங்களுக்கு எந்தவொரு பாத்திய உரிமையும், கூட்டு அனுபவமும் எந்த காலத்திலும் இருந்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அதனால் மேற்படி உண்மை சங்கதிகளை மறைத்து

பொய்யான சங்கதிகளை கொண்டு தாக்கல் செய்துள்ள இந்த பாக தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.01.10 13:20:39 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**